# தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 20] MADRAS:—SUNDAY MAY, 16, 286 A. S. [Monthly, 4 Annas.


சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.


| | |
|---|---|
| கடவுள். | மூடசுவாமிகள். |
| நல்லொழுக்கத்திற்கு மறுமைப்பயன் அவசியமா? | காளிகுழுமாயி.--கார்ஸ்டினைக் கொள்ளையடித்த கேஸ். |


## கடவுள்.

கடவுள் என்னப்பட்ட சொல் வெகு தெளிபொருளாக சர்வசனங்களாலும் வழங்கப்பட்டுவருகின்றது. இந்தசொல்லை வழங்கிவரும் சனங்களுக்கெல்லாம் இச்சொல்லால் சூசிக்கப்படும் பொருள் இன்னதென்றும் அதனது சொருபலக்ஷணம் தடத்தலக்ஷணம் முதலிய இலக்கணங்கள் அவ்வளவு சாதாரணமாய் விளங்கியிருக்குமென்பதுஞ் சந்தேகம். பொருள்விளக்கமாகாமற் பெயர்மட்டில் பிரீதிகொண்டு இருக்கும்போதும் நிற்கும்போதும் இரவிற்கண் துயிலும்போதும் நடக்கும்போதும் பொருந்தி உண்டு உய்க்கும்போதும் "கடவுளே; ஈஶ்வரா; நாராயணா; ஜகதீசா" வென்று மனுஷகற்பனா நாமங்களையிட்டு அருகிருப்பவனை யழைப்பதுபோல அழைக்கின்றார்களே இஃதென்ன பித்தத்தின்சேட்டையோ யாமறிகின்றிலம். காணாதபொருளைக் கதறிக்கூவி யழைத்தும் தெரியாதபொருளைத் தேடியுலைந்து அலைந்தும் பயனொருசிறிதும்பெறாமல் வாணாளை வீணாட்படுத்துவதும் பிருதக்கரண சக்தியுடைய பிராணிகளாகிய மனிதருக்கழகா? இதுமட்டோ வீணிற்கு முத்துலைபோட்டு விழலுக்கிறைத்ததுபோல தாங்கள் தாங்கள் வருந்தித்தேடியபொருள்களையெல்லாம் கோயிற்கட்டடத்திற்கென்றும், கும்பாபிஷேகத்திற்கென்றும், திருவிழா நைவேத்தியமுதலியவற்றிற்கென்றும், கொட்டுமுழக்கிற்கென்றும், ஆபரணத்திற்கென்றும், கல்செம்பாதி யுலோகங்களாற்செய்த விக்கிரகங்களைக்கழுவி யாடையாபரண அலங்கிர்தஞ்செய்து கனங்குறைந்துமாயும் நம்மிந்துவிவேகிகளுக்கு என்னதான் சொல்வோம். மரப்பாச்சிக்கு மாலைசாத்தி மணம்புரிந்து களிக்கும் மந்தமதியுடைய நம்மக்களுக்கும் அனுபவமுதிர்ந்து அறிவிற்சிறந்த நம்ம ஆத்திகமாந்தற்கும் என்னபேதம். அவ்வீண் விஷயங்களிற் செலவிடும் பொருள்களைக்கொண்டு அன்னதானம்செய்தாலாகாதா? வித்தியாசாலைகட்டுவித்தாலாகாதா? வித்தியாபிவிர்த்தியின்பொருட்டுச் செலவிட்டாலாகாதா? அநாதரவாகிய பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் பசியாதிதேகபிணிகளைத்தீர்க்க வைத்தியசாலை வயோதிகசாலை முதலியன வேற்படுத்தினாலாகாதா? பொன்னாற்பிரயோசனம் பொன்படைத்தாற்குண்டோ அல்லது அப்பொன்னிற்குத்தானுண்டோ† எல்லாமுடையார் கடவுள் என்னுங்கியானம் உண்மையாகவே இவர்களுக்கு இருக்குமானால் இவர்கள் என் அக்கடவுளுக்கு ஆடையாபரணம் தூபதீபநைவேத்[?]யம் செய்கின்றார்கள்? ஓர்பொருளின்பிரயோசனம் அஃதில்லாதவர்களுக்கு அதைக்கொடுத்தால் உண்டாகுமோ, உள்ளவர்களுக்குக்கொடுத்தால் உண்டாகுமோ யோசித்துப்பாருங்கள்.

## நல்லொழுக்கத்திற்கு மறுமைப்பயன் அவசியமா?

அமரம்பேடு

முத்துசாமிமுதலியாரால் எழுதப்பட்டது.

'ஆத்துமா அழிவில்லாததா?" என்னும் தலைப்பெயருடைய மெய்யறிவு உ-ம் பாகத்தின் கடைசியில்மனிதருடைய ஆத்துமா அழிவில்லாததென்பதற்கு விக்கினம் வருமாயின், அவனுடைய நல்லொழுக்கத்திற்கு அழிவுவருமென்று சிலர் சொல்லுவதைப்பற்றி வேறு சஞ்சிகையில் எழுதுவதாக நான் குறித்திருப்பதால், ஆத்துமா அழிந்துபோவதாயிருக்குமாயின், மறுமைப்பயனனுபவம் அவசியமில்லாமற்போதலின், நல்லொழுக்கமுடையவனாயிருக்க வேண்டுமென்கிற எண்ணம் மனிதனுக்குண்டாக மாட்டாதென்று அவர்கள் சொல்லுகிறதினிமித்தம், மனிதனைச் சன்மார்க்கத்தில் நடத்துவதற்கு மோட்சசாம்ராஜ்ய சந்தோஷமும் நரகவேதனை துக்கமும் இருக்கவேண்டுமென்பது எவ்வளவு மட்டில் பயன்படுகிறதோ அதை ஆராயவேண்டி, இந்தவிஷயத்திற்கு "நல்லொழுக்கத்திற்கு மறுமைப்பயன் அவசியமா?" என்கிற தலைப்பெயரிட்டு எழுதத்தொடங்குகிறேன்.

நல்லொழுக்க மின்னவையென்றும் தீயொழுக்கமின்னவையென்றும் ஆதியிலேதானே வேதங்களிலும் பின்பு அவற்றை அனுசரித்து ஆகமபுராண மனுநீதி சாஸ்திரங்களிலும் வகுக்கப்பட்டிருக்கின்றனவென்றும் அந்த நல்லொழுக்கங்களை அனுசரிப்பது புண்ணியமென்றும் அதனால் மேலுலகத்தில் பேரின்பமுண்டாகுமென்றும், அந்தத் தீயொழுக்கங்களை அனுசரிப்பது பாவமென்றும் அதனால் நரகலோகத்தில் பெருந்துன்பமுண்டாகுமென்றும் சொல்லுகிறார்கள்.

ஆதியிலே மாமிசபட்சணமும், மதுபானமும், நரபலி மிருகபலிகளும் சாதாரணமாய் நடந்தேறிவந்தன. இவை அப்போது வேதமாகிய சுருதி சம்மதமாகவே யிருந்திருக்கின்றனவென்றும், பின்னர் அவை பாபகிருத்தியங்களென கலியுக தருமத்தைநோக்கி ரிஷிகள் ஸ்மிருதிகள்செய்து அவற்றின்மூலமாய் விலக்கியிருக்கிறார்களென்றும் சொல்லுகிறார்கள். நாளதுவரையில் சில தேவதைகளுக்கு மிருகபலி கொடுப்பதும், சத்திகளுக்கு மதுமாமிச பட்சணம் படைத்து ஆராதித்து சில பிராமணர்கள் புசித்துவருவதாகச் சொல்லப்படுவதுந்தவிர, ரதோர்ச்சவ ஆரம்பத்திலும் நூதனமான வண்டி முதலிய வாகனப்பிரதமப் பிரவேசகாலத்திலும், உதிரங் காணவேண்டுமென்கிற பிரமாணத்தினால், கலியாணப்பூசினிக்காயைத்துளைத்து குங்குமத்தை அடைத்து போலியாக செந்நீரொழுகும்படி பலிகொடுக்கிறார்கள். இதனாலே ஆதியில் நீதியாக எண்ணப்பட்டது பின்பு அநீதியாக முடிந்ததுமன்றி, உண்மையான கலியாணமுதலியவற்றின் பாவனையாக சிறுமிகள் விளையாட்டயர்வதுபோல, பாவனையாக பலிகொடுப்பது முதலியவை என்னவிளையாட்டோ, என்ன ஆசாரமோ! கலியாணகாலத்தில் ஆகாயந்தெரியாமல் பந்தலின்கீழ் தம்பதிகளிருக்கையில் ஆகாயத்தில் அருந்ததியென்று விளங்கும் நட்சத்திரத்தைக்குறித்து தலைகுனிந்துகொண்டிருக்கும் கலியாணப்பெண்ணைப் பார்த்து ஆசாரியர் மாப்பிள்ளையைப் அருந்ததியைப் பார்த்தையா வென்று கேட்கச் சொல்லுகிறதையும், பாராதிருக்கப்பார்த்தேனென்று பெண்ணைச் சொல்லச்சொல்லுகிறதையும் யோசிப்போமாகில், இவ்வாறு பொய்சொல்லும்படி சுருதிகளையும், ஸ்மிருதிகளையும், ஆகமங்களையும் ஆராய்ந்த ஆசாரியர்கள் இடங்கொடுத்திருப்பதை நினைக்க நினைக்க, அது எவ்வளவு நீதிமார்க்கமாகத் தோன்றுகிறது? விவாககாலத்தில் தேவதைகள் சாட்சியாயும், அக்கினி சாட்சியாயும், வேதபிராமணர்கள் சாட்சியாயும், பந்துக்கள் சாட்சியாயும் 'நீயே எனக்குப் பத்தினி, நானே யுனக்குக் கணவன்' என்று மனைவிக்குப் பிரமாணஞ் செய்துகொடுத்த கணவன், அந்த மனைவி சுகஸ்திதியிலிருக்கையிலும், பிராமணர்கள் முதலாய் வேறு மணங்கள் புரிவதையும், வைப்பாட்டிகள் வைத்துக்கொள்வதையும், அவ்வாறே தேவர்களுக்கும் பல பத்தினிமாரும் வைப்பாட்டிகளும் உண்டாயிருந்ததையும் யோசிப்போமாகில், இவ்வாறு நடப்பதற்கு வேதத்தில் ஏற்பாடிருக்குமென்றே நினைக்கிறேன். அப்படியிருக்குமாயின், அந்த வேதங்களும் உத்தமமானவைகளே; அவற்றைச்செய்தவர்களும் உத்தம புருடர்களே.

அன்றியும் கடவுள் ஒருவர் உண்டென்கிற நம்பிக்கையும் நரகவேதனை பீதியுங் காரணமாக மானிடர்கள் நல்லொழுக்க நெறியில் நிற்பதன்றி, அவையில்லாவிடில் உலகம் நன்

னெறி தப்பிச்சிதைந்து அலைக்கழிந்து போமென்றும், அப்படிப்பட்ட நம்பிக்கையும் பீதியுமில்லாத நாஸ்திகர்களிடத்தில் நற்குண நற்செய்கைகள் மருந்துக்காயினும், எள்ளளவாவது காணப்படாவென்றும், மதஸ்தர்கள் உறுதியாய்ச்சொல்லுகிறார்கள். அவர்கள் அப்படிச்சொல்வது சகஜமே. ஏனெனில், தங்களுக்கமைந்திருக்கிற கிஞ்சித்து சன்மார்க்கமும் கடவுள் நம்பிக்கையினாலும் நரகபீதியினாலும் கிடைத்த மகாப்பிரசாதமென்று கருதியிருப்பதுமன்றி, கருடபுராண வசன காவியத்துடன் சேர்த்திருக்கிற நரகலோகபடம்போல், பிரமலோகம், தேவேந்திரபோகலோகம், வைகுந்தம், கைலாயபதவிகளையும், இவ்வுலகத்திலே காணவுங் கருதவும் படுகிற ஜந்துக்களும் ஆயுதங்களும் போன்றனவாகிய அரவக்குழி, அரணைக்குழி, அட்டைக்குழி, அக்கினிக்குழி, கரும்பாலை, செக்கு, உடைவர்ள், சுரிவாள், சூலம், வேல், கழுமர முதலியவைகளால் நிறைந்துள்ள நரகலோகத்தையும் எழுதியிருக்கிற ஒருபிரமாண்டமான படத்தைவிரித்து,பார்க்கிற சனங்கள் பிரமிக்கும்படி இன்னின்ன பாவத்திற்கு இன்னின்னதெண்டனையென்று ஏற்ற சந்தப்பாட்டினால் விரித்துரைத்து மதியூட்டிக் காசுபறிக்கிற கள்ளப்பண்டாரங்கள் பிறருக்குத் தாங்கள் உணர்த்தியவறிவை இன்னதென்று தாங்களுணராமல் நரகபீதியற்றவர்களாய்க் கடைசியில் கள்ளுக்கடையில் நுழைவதையும், சாயுங்காலமானால் குளித்து நார்மடியுடுத்தி விபூதிருத்திராட்சந்தரித்து, தேவாலயத்திற்சென்று, சுவாமிதரிசனஞ்செய்து, புத்திவந்ததென்று தாடையிலறைந்துகொண்டு திரும்பிவருகிற சிலபத்தர்களும் பகற்காலத்தில் நீதிஸ்தலங்களிற்சென்று பொய்ச்சத்தியம்பண்ணி, பொய்ச்சாட்சி சொல்லிவருகிறதையும், சில ஹரிபக்தர், சிவபக்தர்கள் அக்கிரமமான செய்கைகளுக்காக ராஜநீதி சட்டப்படி சிட்சையடைந்து வருவதையும், தேவாலயங்களுக்கு அதிபதிகளாய், தேவதாக்கிரியைகளைக் கிரமமாய் நிறைவேற்றுவதாகத் தருமகர்த்தர்களெனப் பெயர் பூண்ட சில புண்ணியவான்கள் தேவாலய சொத்தைக் கவளீகரிப்பதையும் பார்த்து வருகிற மற்றமதஸ்தர்கள் கடவுளொருவருண்டென்று நம்பி நரகவேதனைக்குப் பயப்படுகிற ஆஸ்திகர்களே இவ்வாறு அதிக்கிரமித்து நடப்பார்களாகில், நிர்ப்பயமாயிருக்கிற நாஸ்திகர்களைக்குறித்துக்கேட்பானேனென்று பிரமிக்கிறார்கள்.

தேவநம்பிக்கையும் நரகபயமும் மதஸ்தர்களுக்குள் ஒவ்வொருவருக்குமுண்டு. நரகவேதனைபயம் அற்பசொற்பமானதல்ல. ஒருவன் ஒவ்வொருகாரியஞ் செய்யத்தொடங்குந்தோறும், அவனுடைய மனதைவிட்டு அகலாமல் எப்போதும் குடிகொண்டிருக்கவேண்டிய அந்தப்பயம் அவனுக்கு எச்சரிக்கை செய்துகொண்டேயிருக்கும். ஒருவேளை மறந்துவிடுவானென்றாலும், அவனுக்கு நினைப்பூட்ட ஒருதெருவுக்கு இரண்டுமூன்று ஆலயங்களிருக்கின்றன. இவ்வாறாகையில், ஒவ்வொருமதஸ்தனும் முழுதுஞ் சன்மார்க்கனாயிருந்திருக்கவேண்டுமே. அப்படியிராமையால், மதத்திற்கும் சன்மார்க்கத்திற்கும் சம்பந்தம் கற்பிக்கக்கூடாமைபற்றி, ஆஸ்திகனாயினும் நாஸ்திகனாயினும் சன்மார்க்கனாயிருப்பதற்குக்காரணம் வேறேயிருக்கிறதென்று நினைக்கவேண்டும். புத்திமானாயிருக்கிறவன் இவ்வுலகத்திலே சுகத்தையும் மதிப்பையும் விரும்பாதவனாயிரான். மானுஷீகமும் அவனிடத்திலிக்கிறது. அப்படிப்பட்டவன் சன்மார்க்கனாயிராவிடில் தனது விருப்பம் நிறைவேறாதென்று தெரிந்துகொள்ளுகிறான். இவ்வாறு ஆராய்ச்சிசெய்து, தெளிவடைந்து மானுஷீகத்தோடு நடப்பவனே சன்மார்க்கத்தில் நிலைபெற்று எப்போதும் பரிசுத்தனாயிருப்பான். பயத்தினாலே சன்மார்க்கத்தை யனுசரிக்கிறவன் சன்மார்க்கனல்லன். ராஜநீதி சட்டதண்டனைக்குப்பயந்து திருடாதிருப்பவன் திருட்டுகுணமுடையவனே யல்லாமல் யோக்கியனல்லன். திருட்டுகுணம் மனிதனுக்குத் தகாததென்றும், அந்தக்குணமுடையவன் இழிந்தவனாய் மனிதவெண்ணிக்கையில் வைக்கப்படமாட்டானென்றும், இவ்வாறு பலவித யோசனையாற் றெளிந்து அத்துர்க்குணத்தையொழித்திருப்பவனே யோக்கியன். இதற்குத் திருஷ்டாந்தமாகத் தனித்தனியாய் ஒவ்வொரு நபரையும், கூட்டமாகவொவ்வொரு தேசத்தாரையும் நாம் ஆராய்ந்துபார்க்கவேண்டும். இதுவிஷயமாய் (ராபர்ட்டுகூப்பரொன்பவர்) எடுத்துப்பேசியிருக்கிற சங்கதிகளின்கருத்து அடியில்கண்டெழுதப்படுகிறது.

பரலோக வின்ப துன்ப சித்தாந்தமானது அகத்தியம் வேண்டியிராவிட்டாலும் அது உபயோகமுள்ளதாகவே யிருக்கிறதென்றும், அந்த சித்தாந்தமிராவிடில் உலகத்திலே சன்மார்க்கமென்பது பூண்டற்று எங்கும் துன்மார்க்கம் பரவிவிடுமென்றும், யோக்கியதைக்கு முகாந்தரமேயிருக்கமாட்டாதென்றும்,ஜனங்களுக்குள் துர்க்குணங்கள்நிறைந்து குற்றங்கள் அளவிறந்தனவாய் விடுமென்றும், மிகவும் புகழ்ச்சியாய்ச்சொல்லப்படுகின்றது. எனது நண்பர்களே!இந்த அபிப்பிராயம் உண்மையானதல்லவென்று நான் கடுகடுத்து மறுக்க வல்லேன். அப்படிப்பட்ட அபிப்பிராயம் மானிடஜாதியின்பேரில் கடுங்குற்றங் கூறுவதாகும்; நீதியும் நல்லொழுக்கமுமுடைய சகலருக்கும் அது பெருத்த அவமானம்; மானுஷிகத்திற்குரிய சிறந்த மேன்மையை உணராதவர்கள் தவிர வேறொருவரும் அப்படிப்பட்ட அருவருப்பான இழிந்த அபிப்பிராயத்திற்கு ஆதரவாய்ப் பேசமாட்டார். அப்படிப்பட்ட அபிப்பிராயம் நிலைபெற்று நல்லொழுக்கத்திற்கு இன்றியமையாததாய் மதிக்கப்படுமாயின், நமது சன்மார்க்கமானது எப்போதும்போலவே கபடமார்க்கமான ஏற்பாடாகவும் பிரபலமான கள்ளவொழுக்கமாகவுமிருப்பதன்றி, மேன்மை, உதாரத்துவம், விசுவாசமுதலிய அறநெறிகளையுடைய பலருக்கும் வெட்கக்கேட்டை யுண்டுபண்ணுவதாயு மிருக்கிறது. ஜனங்கள் பிறப்பிலேயே துன்மார்க்கர்களாயிருக்கிறார்களென்றும், நமக்கு அப்படிப்பட்ட சித்தாந்தமொன்று இராவிட்டால் நாம் மனிதராயிராமல் மிருகங்களாக விருப்போமென்றும் சொல்லி ஜனங்களுக்கு நல்லொழுக்கத்தைக்காட்டுவதற்குச் செய்திருக்கிற அந்த ஏற்பாடு மிகவும் விந்தையானதுதான். அப்படிப்பட்ட சித்தாந்தத்தை லட்சியஞ்செய்யாமல் சன்மார்க்கத்திலே மேன்மையடைந்திருக்கிற நபர்களையுந் தேசத்தார்களையும் நாமெடுத்துக்காட்டுவோமாகில், சன்மார்க்கத்திற்கு அப்படிப்பட்ட சித்தாந்தம் அவசியமென்பது அடிபட்டுப்போம். இப்படிப்பட்ட சித்தாந்தம் எவ்வளவேனுமிராத தேசங்களிலே வெகுமேன்மையான சன்மார்க்கங்கள் காணப்படுகின்றன. அர்ருஜலாந்த்ஸ் என்னும் தீவிலுள்ளவர்கள் இறந்தபின்பு மோட்சசாம்பிராச்சியமாவது நரகவேதனையாவது அடைவோமென்கிற எண்ணமற்றவர்களாயிருந்தும், அவர்கள் ஒருவருக்கொருவர் மிகவும் அன்னியோன்னியமாய் வாழ்ந்துகொண்டு,ஒருவருடைய சொத்தை யொருவர் அபகரியாமல் தங்கள் தலைவர்களுடைய தீர்ப்புகளுக் குட்பட்டு நல்லொழுக்கத்தில்நடக்கிறார்களென்று, (D. H. Kolff) என்பவர் தமது கிரந்தத்தில் எழுதியிருக்கிறார். இப்படிப்பட்ட சித்தாந்தத்தைக் கனவிலுமறியாத காப்பிரிகள் நல்லொழுக்கத்தில் சிறந்தவர்களா யிருக்கிறார்கள். அந்த ஜனங்களுடைய நல்லொழுக்கத்தைக்குறித்து காப்டன் பெஞ்ஜமின்ஸ்டவுட் என்பவர் வெகு மேன்மையாய்ப் பேசியிருக்கிறார். தங்களைப்போன்ற மானிடரிடத்திலே (நடுவுநிலைமையாய்) நல்ல அபிப்பிராயங்கொள்ளுகிற யாவரும் மவுடீகர்களென்று சொல்லப்பட்ட அந்த காப்பிரிகளின் மரியாதை இரக்கமுதலிய சற்குணங்களைப்பார்க்கையில் ஆனந்தியாமற்போகார்கள். அவர்களுடைய நடத்தையைக்கண்டு நாகரீகமுள்ள தேசத்தார் வெட்கிப்போகவேண்டியதே. கடவுள் ஒருவர் உண்டென்கிற எண்ணங்கூட இல்லாதவர்களாயிருந்தும் அப்படிப்பட்டவர்களுடைய நடத்தையானது கிரிஸ்தவ மயமான நாகரீகமுள்ள தேசத்தவர்களும் கற்றுக்கொள்ளதக்கதா யிருக்கிறது. ( கிரிஸ்தவ ) சமயிகளாகிய நமது தேசத்தவர்கள் தூண்டுவதற்கு மோட்சம் நரகமென்ப தொன்று மில்லாமலே நல்லொழுக்கத்தி லொழுகுகிற அந்த ஜனங்களைப்பார்த்து ஒழுகுவது உத்தமம். (இன்னும்வரும்.)

## மூடசுவாமிகள்.

ஐயா, தத்துவவிவேசினிபத்திராதிபரே! இச்சிறுவன் வரைந்தனுப்பும் சிலவரிகளைத் தமது தத்துவவிவேசினி பத்திரிகையி னோர்கோணத்தில் தீட்டி, சுயக்கியான நண்பரோடு வீண்குதர்க்கம் பேசிவரும் சில அஞ்ஞான ஆத்திக மூடசுவாமிகளுக்குக் காட்டி நாட்டுவீர்களென வரையாநின்றனன்.

கனம்பொருந்திய ஐயா, இக்கருவூரின்கண்ணுள்ள பசுபதி ஈஸ்பரர்கோவிலில் யாரோ ஒருசுவாமியார்நிர்வாணியாகவும், மௌனியாகவும், சிலமாதங்களாக இவ்விடமிருப்பதாய் எனது நண்பர்களால் கேள்வியுற்று நிகழுமாதம் சஉ சாயந்திரம் சுமார் ஐந்துமணிக்கு ஆண்டு சென்றிருந்தேன். ஷை கோவிலில் யான் சென்றிருந்தநேர மவர் வெளியேகியிருந்தனர். யான் ஷை ஸ்தலத்தை சுற்றிப் பார்வையிட்டுவருவதற்குள் ஷை சுவாமியார் தனது ஸ்தானத்தில் வீற்றிருக்கக்கண்டேன். அங்கு இவரைத் தேடிக்கொண்டுநின்ற ஒரு பிராமண வாலிபன் மறுபடி இவரிருக்கக்கண்டு இவரிங்கு எப்படிவந்தனர், ஆச்சரியம்! ஆச்சரியம்! என்றான். ஷை சுவாமியாரை யான் சற்று கவனிக்கையி லவர் பாதங்களெல்லாம் தூசி நிறைந்திருக்கக்கண்டு இப்பொழுதுதான் வந்திருக்கலாமென்றேன். அன்றியும் இவர் ஸ்தானத்தில் இவருக்கு வேண்டிய உணவாதிகள்வைத்திருக்கக்கண்டேன். அஃது பின்வருமாறு:—ஓர் கலயத்தில் பணியாரமென்கிற பக்ஷணமிருக்கக்கண்டு சுவாமிக்கு பணியாரத்தின்மேலும் பிரீதியுண்

டோவென்றேன், மௌனமாயிருந்தனர். இன்னும் ஓர் கலயத்தில் தைரிருக்கக்கண்டு சுவாமிக்கு தைரின்பேரில்கூட பிரீதியுண்டோவென்றேன், அதற்கும் மௌனமாய்த் தலையைக் குனிந்துகொண்டிருந்தனர். சுவாமி ஏறிட்டுப்பார்க்கக்கூட கஷ்டமோவென்றேன், அதற்கும் ஊமைபோலிருந்தனர். மேலும் சுவாமி நிர்வாணியென்பதை கேள்விப்பட்டு அவரது ஆண்குறியின்பேரில் ஓர் வஸ்திரமிருக்கக்கண்டு ஏது சுவாமிக்கு அபிமானமென்பது இன்னும் கொஞ்சமிருப்பதுபோலத் தோன்றுகிறது. ஆனால் இவர்சகலமும் துறந்தவரல்லவென்றேன், அதற்கும் சவாப்புசொல்லவில்லை. அன்றியும் இவர் புகைகுடிப்பதற்கு அடுப்பிலிருந்து நெருப்பெடுக்கும்பொழுது ஓர் பொறி அவரது வஸ்திரத்தில்பட்டு எறிந்தது. அதையவர் தனதுகையால் அணைத்துவிட்டார். சுவாமி சகலமும் துறந்தவராயிற்றே, அந்நெருப்பு தங்களை சுடாதேயென்றேன், அதற்கும் பேசாமலிருந்தார். இதற்குள்ளாக ஒருபேதையானவள் அவருக்கு ஒருபாத்திரத்தில் உணவாதிகள் கொண்டுவந்து உண்ண வேண்டுமென்றாள். அதற்குபரமபுருஷன் குரும்பாட்டைப்போல் வேண்டாமென தலையசைத்தான். பேதையானவள் அருகிருந்தவர்களைநோக்கி சுவாமிகளை யென்னசெய்தீர்கள்,சுவாமிவருத்தப்படுகிறதேயென்றனள். யான் ஷெ யானிடமிருந்து சுவாமியினுடைய வரலாற்றைக்கேட்க ஆரம்பிததேன். (அவள்சொல்லுகிறதாவது) சுவாமி இங்குவந்து நாலுமாதமாகிறது; அவருக்கு இங்கிலீஷ். துலுக்கு, தெலுங்கு, கன்னடம்முதலிய பாஷைகள் நன்றாய்த்தெரியும், இவர் இரண்டுமாதத்திற்குமுன் கடிதமூலியமாய் அநேகம்பேசியுளார். ஆனால் இயற்கைமௌனமல்ல, ஏதோசில காரணநிமித்தம் இப்படிவந்திருக்கிறார்; அன்றியும் இவர் கையால் அள்ளிச்சாப்பிடுகிறதில்லை. மிருகங்களைப்போல் தரையிலிடவேண்டும் அல்லது குதிரைகளுக்குக் கொள்ளுகட்டுகிறதுபோலிவருக்கு சாதம் ஊட்டவேண்டும். ஐயா சுவாமியை யென்னசெய்தீர்கள், மெத்தவருத்தப்படுகிறதே யென்றனள், அதற்கு யான் சுவாமியை ஒன்றும் செய்யவில்லை சில சங்கைகளைக்கேட்டேன் மௌனமாயிருந்தனர் யென்றேன். அதற்குள் ஷெ மூடசுவாமி தவம்புரியும் பாவனையைக்காட்டி உட்கார்ந்தனர். பேதையானவள் அவரைப்பார்த்து சுவாமியை யென்னமோவல்லோ செய்திருக்கிறீர்கள். ஆகையால்தான் அவர் தவசுசெய்கிறார், கடைசியில் யெப்படிமுடியுமோவென்றாள். யான் பயந்து அவிடம் நிலைபெருமல்வீடுவந்து அன்றுராத்திரிமுழுதும் நித்திரையில்லாமல் ஷெ சுவாமியின் வாக்கு பலிக்குமென்கிற நோக்கம்கொண்டிருந்து பலியாமற்போனதினால் இங்கு தீட்டலானேன்.

ஐயா, பத்திராதிபரோ! புத்தியிற் றேர்ந்த கனவான்களே! இத்தகைய பேதைச்சுவாமிகளை எங்கையாகிலும் கண்டிருக்கின்றீர்களா? கிஞ்சித்தும் மானுஷீகத்தன்மை பொருந்தியிலாத இம்மானுஷாமிருக மூடசுவாமியா என்னைத் தவம் புரிந்து கொல்லப்போகிறார்? பத்திராதிபரே! இவர் இக்கோயிலில் நிவேதனமாகும் தோசை, வடை, கடலை, சுண்டல், பணியார முதலிய பக்ஷணங்களை மெத்தபிரீதியுடன் கொழுக்கத் தின்றுவிட்டு தான் சகலமுந்துறந்த சன்யாசி யெனப் பேர்வைத்துக்கொண்டு பேதையர்களைமிரட்டி காலக்ஷேபம் செய்துவரும் இம்மூடசுவாமியினிடம் சில மகத்துவமுண்டெனக் கருதி செல்லுகின்ற இக்கரூரின்கண்ணுள்ள கனவான் தனவான்களே! எச்சரிக்கை, எச்சரிக்கை.

இங்ஙனம்.
திரிசிரபுரம். புத்தூர்
சுயக்கியானநேசன் - வையாபுரிபிள்ளை.

---

## காளிகுழுமாயி.

(சுஎ-வது பக்கத் தொடர்ச்சி.)

திரிசிரபுரம் புத்தூரின்கண் ஷெ திருவிழா மாசிமாதம் மூன்றுதினமாய் நடந்தேறிவருகின்றது. அத்தினங்களில் கொலையுண்ட ஆடுகளின்தொகை சுமார் ஆயிரமுண்டென கணிததால் தெரியவருகின்றது. அவைகளில் ஒருமாதத்திற்குட்பட்ட ஆட்டுக்குட்டிகளின் தொகை சுமார் எண்ணூறு, மீதி பரியாடுகளே. இதன்றியும் அநேக பட்டித்தொட்டிகளிலிருந்து கொண்டுவந்து கொடுப்பதும் வழக்கம். யானும் பலவருஷங்களுக்குமுன் கொடுத்தவன்தான். ஆயினும் தற்காலம் சுயக்கியான அபிவிர்த்தி நாளுக்குநாள் பெருகிவர அந்நர்க்கிரியைகளையெல்லாம் யுக்தியனுபவத்தால் பொய்யெனமதித்து சுமார் தத்துவவிவேசினி பத்திரிகைகள்கிடைத்த இரண்டு மூன்று வருஷ காலமாய் மேலைய பூசாரிகளின் பிழைப்பிற்கும் ஞாயம்பகராமல்நடுத்தெருவில்நின்று கடவுள் ஒருவர் உண்டென்று வீண் குதர்க்கம் பேசிவரும் அஞ்ஞான ஆத்திகரின் பிழைப்பிற்கும் உலைவைத்துக்கொண்டுவருகிறேனென்பதை மேற்படி யூரின்கண்ணுள்ள ஆத்திக சுவாமிகளும், மருளாளி ராமகிருஷ்ணப்பிள்ளையுமறிந்தவிஷயமே.

மருளாளியவர்காள்! ஏழை ஆட்டுக்குட்டிகளைக்கொன்று அதின் உதிரத்தை உட்கொள்ளும்பாவனைகாட்டி உட்கொள்ளாமல் ஆனந்தமடைவது யென்னமதியீனம். அப்படியாகிலும் அதின் உதிரத்தை பலருமறிய பகிரங்கமாய் உட்கொள்ளுகிறீரா? இல்லையே; உமது குட்டிப்பூசாரிகள் உமக்கு மேற்படி குட்டிகளை அறுத்துக் கொடுக்குந் தந்திரமும் நீரதை உட்கொள்ளுந் தந்திரமும் யானறிந்து எத்தனையோதரம் எமதன்பர்களுக்கு நிரூபித்திருக்கிறேன். பிள்ளையவர்காள், எண்ணிறந்த குட்டிகளின் உதிரத்தை மேற்படி தினங்களில் நீருட்கொள்ளுகிறதாக எனது நண்பர்கள் அடிக்கடி என்னை வாதிப்பதாலும் யானும் பத்து பன்னிரண்டுவருஷகாலமாய் அனுபவத்தில் பார்த்து வந்திருப்பதாலும் மருளாளியவர்காள்: இதோ உம்முன் ஒருபாத்திரத்தில் ஒரு குடம் ஜலமாகிலும் அல்லது உதிரமாகிலும் வைக்கிறேன், நீராவது அல்லது இவ்வுலகின்கண்ணுள்ள எந்தப் பூசாரி மருளாளிகளாவது அதை பானஞ் செய்வார்களேயாகில் ரூபாய் - ருO - கொடுக்கிறேன், வருஷத்தில் ஆயிரம் ஆட்டுக்குட்டிகளின் உதிரத்தை உட்கொள்ளும் உமக்கு ஒரு குடம் ஜலத்தை உட்கொள்ளுவது கஷ்டமா?

ஐயா, பிள்ளையவர்காள்! சென்ற 1884-ஞு டிசம்பர்மாதம் வருஷித்த மழையின்போது தாங்களெவ்விடம் சென்றிருந்தீர்களோ யானறிந்திலன். மேற்படி மழையின்போது உமது தாயாராகிய தேவதை பட்டபாடு எவ்வளவு! ஒரு வாரம்வரையிலும் மூச்சுவிடாமல் ஜலத்தில் அமிழ்ந்துகொண்டிருந்தனளே பாவம், பாவம், தினே தினே அபிஷேகாதி நைவேத்திய சடங்குகளெல்லாம் யெங்கே யொழிந்தன. மேற்படி கோவில்பெருச்சாளிகளாகிய குட்டிப்பூசாரிகள் என்னசெய்தனர்களோ யானறிந்திலன். அக்காலம் நீர் ஊரிலிருப்பதாய்க் கேள்வியுற்று உமது தாயார் படும்பாட்டை மேற்படி யூரின்கண்ணுள்ளவர்கள் உமக்குத் தெரிவித்தனர்களே. அச்சமயமாகிலும் இடறுற்றபோது உதவிசெய்யாதபேர் நட்பிருந்தென்ன போயுமென்ன என்ற வாக்கியத்தின்படி நீர்வந்து உம்மால் இயன்றசக்தியை காண்பியாமல் நீரும்பிறரைப்போல் வேடிக்கைபார்க்க வந்தாற்போல்வந்து போய்விட்டீரோ, இதுதானோ நம்முடைய வீரம், ஜலப்பிரவாகம் மிகுதியாயிருந்ததினாலா? கடக்கமுடியாமற்போய்விட்டீர். இஃது சால அழகுடைத்து. பிள்ளை கொடுக்கவும் பேயைவிரட்டவும் சக்தியுள்ள உமக்கு மேற்படி பிரவாகத்தைக் கடக்க ஏலாதென்றால் பேதையும் வாயினால் சிரிப்பளோ, ராமகிருஷ்ணம்பிள்ளையவர்காள் இது என்னபேதைமைநியாயம் யோசியுங்கள்.யோசியுங்கள்.ஐயோ! உமது தாயார் ஒருவாரம்வரையிலும் ஜலத்தில் அமிழ்ந்து கிடந்ததினால் பாசம்பற்றி தவளை, மீன், பாம்பு முதலிய நீர்வாழ்வன ஜெந்துக்களெல்லாம் மேற்படி உமது தாயாராகிய விக்கிரகத்தின் கண்ணிலும், காதிலும், மூக்கிலும், சந்திலும், பொந்திலும் முட்டையிட்டுக் குஞ்சுபொரித் திருந்தனவே, அதுகளை நீராவதுசென்றுவிரட்டினீரா அல்லது அது வதுவாகச் சென்றதுகளா தெரியப்படுத்தவும். பிள்ளையவர்காள், ஜலப்பிரவாகத்திலமிழ்ந்து கரையேறமுடியாத நின் தாயாராகிய இக்காளியென்னும்மூளியா ஏனையோர்க்குவரும் விபத்துகளை தீர்க்கப்போகிறாள், மேலே யெடுத்துக்காட்டிய நியாய ஆதாரங்களால் உமது தாயாரின் சக்தியை மிகவும் தெரிந்தேன். இச்சக்தியால்தானா நீவீர் ஏனைய மதத்தர்களை ரெட்டைவெடி துப்பாக்கிகொண்டு தொடுக்கப்போகிறீர். பளா, பளா! நன்று, நன்று! ஐயா, பத்துபன்னிரண்டு வருஷகாலமாய் யானும் ஷெ புத்தூரின்கண் வசிக்கின்றேனே, ஏன் என்முன் உமது சக்தியை நாட்டக்கூடாது. உம்மையும் உமது தாயாரையும் காற்றில் பறக்கடிப்பேனென்றெண்ணியா!

ஐயா, ராமகிருஷ்ணம்பிள்ளையவர்காள்! இவ்வருஷம் நீர் உமது குடும்பசவரக்ஷணைக்குத் தந்திரஞ்செய்து மேற்படி கிராமத்திலுள்ள குடிகளிடத்தில் குடும்பமொன்றுக்கு ரூபாய் க-வீதம் வரிகொடுக்கவேண்டுமென்று உமது கோவில் பெருச்சாளிகள் மூலியமாய் ஏற்பாடு செய்யச்சொன்ன விஷயங்களைக்குறித்து வருகிறமுறை தீட்டுவேன். உம்மையும் வாட்டுவேன் அறியவும். (இன்னும்வரும்.)

திரிசிரபுரம், புத்தூர்-வையாபுரிபிள்ளை.

## கார்ஸ்டினைக் கொள்ளையடித்த கேஸ்.

மதுரை ஸெஷன்கோர்ட்டிலிருந்து போடிநாயக்கனூர் ஜமீன்தாருடைய வக்கீலாகிய மிஸ்டர் நார்டன் அவர்களுடைய விண்ணப்பத்தின்பேரில் ஐகோர்ட்டுக்கு மாற்றிக்கொள்ளப்பட்ட மேற்படி கேஸ சென்ற மாசம் உஅ புதன்கிழமைதினம் ஹைகோர்ட்டு ஸெஷனில் சிரேஷ்டநியாயாதிபதி முன்னிலையில் விசாரணைக்குவந்து, ஒன்பதுநாள் விசாரணை நடந்தபிறகு சென்ற சனிக்கிழமைதினம் உ - மணிக்கு முடிவாகி எல்லா கைதிகளும் எவ்விதத்திலும் குற்றவாளிகளல்லவென்று ஜூரிகளால் திர்மானிக்கப்பட்டு அந்தப்படி ஜட்ஜியவர்களால் உடனே விடுதலைசெய்யப்பட்டார்கள். ஹைகோர்ட்டில் வாதி தரப்பில் பப்ளிக் ப்ராஸிகியூடராகிய மிஸ்டர் ப்ரான்ஸன் அவர்களும், மிஸ்டர் பௌவலும் மிஸ்டர் ப்ரொஞ்சு அவர்களால் உதவிசெய்யப்பட்டு கேஸை நடத்தினார்கள். இந்தக் கேஸில் மொத்தக் கைதிகளான கச-பெயர்களில் கச - வது, கைதிதான் போடிநாயக்கனூர் ஜெமின்தார், கங-வது கைதி அவருடைய ஏஜண்டாகிய வெள்ளையராவுத்தன் மற்றக் கைதிகளனைவரும் அல்லது அவர்களில் பெரும்பாலார் ஜமீன்தாருடைய வேலைக்காரர்களென்று சொல்லப்பட்டிருக்கிறார்கள். முதல் கஉ-கைதிகளும் சென்ற டிசம்பர்மாதம் உகவ இராத்திரி தேவதானம்பட்டிக்கும் பெரியகுளத்துக்கும் மத்தியில் மிஸ்டர் ஜெ. எச். கார்ஸ்டின் அவர்களைக்கூட்டக்கொள்ளையடித்து களவுசெய்ததாகவும் அப்படி களவுசெய்ததில் மேற்குறித்த மிஸ்டர் ஜெ. எச். கார்ஸ்டினுக்கு வேணுமென்று கடுஞ்சேதம் விளைவித்ததாகவும், ங-தலைப்பின்கீழ் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்கள். ௰, கக, கஉ, கங; கச - வது கைதிகள் மேற்படி குற்றங்களைச்செய்வதற்கு உதவியாயிருந்து தூண்டிவிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டார்கள். இவர்களில் கஉ-வது கைதியொருவனைத்தவிர மற்றவர்களெல்லோரும் தங்கள்பேரில் சாட்டப்பட்ட ஒவ்வொரு குற்றத்தையும் மறுதளித்தார்கள். கஉ-வது கைதியாகிய சுப்பாநாடன் என்னும் ஒருவன் மட்டும் தன்பேரில் சாட்டப்பட்ட எல்லா குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு தலைப்பின்கீழும் தான் குற்றவாளியென்று ஒப்புக்கொண்டான். மதுரை டிஸ்ரிக்ட்கோர்ட்டு வக்கிலாகிய மிஸ்டர் போல் அவர்கள் க, உ, ங, ச, ரு - கைதிகளுக்கு வக்கீலாகவிருந்து எதிர்வாதம் பேசினார். ம-ா-ா-ஸ்ரீ ஸி. வி. சுந்திரம் சாஸ்திரியவர்கள் கூ, கங - வது கைதிகளுக்காகப் பேசினார், ம-ா-ா-ஸ்ரீ ப. அநந்தாசார்லு அவர்கள் எ, அ, கூ, வது கைதிகளுக்காகப்பேசினார், ம-ா-ா-ஸ்ரீ ஜகராவ்பிள்ளையவர்கள் க0, கக - வது கைதிகளுக்காக எதிர்வாதம் பேசினார், கச-வது கைதியாகிய ஜமீந்தாருக்கு மிஸ்டர் நார்டன் அவர்கள் வக்கீலாகவிருந்து பேசினார். கீழ்க்கோர்ட்டில் இந்தகேஸ் வெளிக்குக்கொண்டு வரப்பட்டபடி இதன்விவரத்தை மித்திரனில் சொல்லியிருந்தது. கீழ்க்கோர்ட்டில் பராஸிகியூஷன் நடத்தியதில் மதுரைஜில்லா கலெக்டராகவிருந்த மிஸ்டர் க்ரோல் பெயரை இத்தோடு பிணைத்து அவரைச் சந்தோஷப்படுத்துவதற்காக அவருக்கு இஷ்டராயிருந்த போடிநாயக்கனூர் ஜமீன்தார் தம்முடைய ஆட்களைஏவி மிஸ்டர் க்ரோலின் பகைவராயிருந்த மிஸ்டர் கார்ஸ்டினை அடித்து நொறுக்கச் சொன்னாரென்றும், பொருள்பறிக்க வேணுமென்பது கொள்ளையடித்தவர்களுடைய எண்ணமல்லவென்றும் சொல்லப்பட்டது. கீழ்கோர்ட்டில் வாதி தரப்பு வக்கீல் மிஸ்டர் க்ரோல் பெயரை இந்தக் கேசோடு சம்பந்தப்படச் செய்ய முயன்ற காரணத்தினாலேயே இது ஹைகோர்ட்டார் முன் கொண்டுவரப்பட்டது என்று யாவரும அறிவார்கள். இதுகாரணத்துக்காகவே இந்தக்கேஸ் மிஸ்டர் க்ரோலுக்கு கவரன்மெண்டில் பகைவர்களாயுள்ளவர்களால் அவரைக்கெடுக்கவேணுமென்கிற எண்ணத்தின்பேரில் இப்படி ஜமீன்தார்பேரிலும் அவருடைய வேலைக்காரர்கள்பேரிலும் புதிதாய் உண்டுபண்ணிக்கொண்டு வரப்பட்டிருக்கிறதென்று ருசுப்படுத்தவேணுமென்று ஜமீன்தாருடைய வக்கீலாகிய மிஸ்டர் ஸல்லிவன, மிஸ்டர் கத்ரீ, முதலிய இன்னும் அநேக பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு சாக்ஷி சம்மன் பிறப்பிக்கவேணுமென்று மன்றாடிக் கேட்டுக்கொண்டு அவர்களை கோர்ட்டுக்கு வரவழைத்திருந்தார். ஆனால் ஹைகோர்ட்டுக்கு கேஸ் மாற்றப்பட்டது முதற்கொண்டு மிஸ்டர் ப்ரான்சன் அவர்கள் மிஸ்டர் க்ரோல் பெயரை இந்தக்கேசோடு சேர்க்கக்கூடாதென்றும், கீழ்கோர்ட்டில் வாதி பக்ஷத்து வக்கீலாகிய மிஸ்டர் ப்ரொஞ்சு அவர் பெயரைக்கொணடுவந்தது பிசகென்றும் சொல்லி, தாம் கேசை ஆரம்பிக்கையிலும் பின் அதை நடத்துகையிலும் அவருடைய பெயரைக் குறிக்காமலே அதிக ஜாக்கிரதையெடுத்துக்கொண்டு நடத்திவந்தார். ஆயினும் மிஸ்டர் நார்டன் அவர்கள் கீழ்க்கோர்ட்டில் கைதிகள் ஒரு நோக்கத்தைக்கொண்டு மிஸ்டர் கார்ஸ்டினை கொள்ளையடித்ததாக வாதிபக்ஷத்து வக்கீல்சொல்லியதை சாக்ஷிகளை குறுக்கு விசாரணைசெய்வதால் முழுதும் அலசி கீழ்க்கோர்ட்டில் கைதிகளுக்குள்ள நோக்கத்தைக்குறித்துச் சொல்லியதெல்லாம் முழு அபத்தமென்று வாதி தரப்பு வக்கீல் தாமே ஒப்புக்கொண்டதும் போதாதென்று மிஸ்டர் க்ரோல் பெயரை இந்தகேசோடு கொண்டுவந்துசேர்த்தது முழுமுட்டாள்தனமென்றும் கொஞ்சமேனும் சரியல்லவென்றும் சிரேஷ்ட நியாயாதிபதியவர்களும் நிந்திக்கும்படி அடிக்கடி அந்த விஷயத்தைப்பற்றியே சாட்சிகளை விசாரணைசெய்து கீழ்கோர்ட்டில் கைதிகள்பேரில்சாட்டப்பட்ட நோக்கத்தை நிற்கவொட்டாமல் நாசம் செய்துவிட்டார். இது விழுந்துபோகவே கைதிகள் இன்ன நோக்கத்தின்பேரில் மிஸ்டர் கார்ஸ்டினை கொள்ளையடிக்கத் துணிந்தார்களென்று சொல்வதற்கு வாதி பக்ஷத்தாருக்கு வகையின்றிப் போய்விட்டது. சென்ற புதன்கிழமை மத்தியானம்வரையில் வாதி தரப்புச் சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு வாதி கட்சிபேசி முடிவாயிற்று. பிறகு எதிர் கட்சி வக்கீல்கள் சில சாட்சிகளைக் கூப்பிட்டு மறுவிசாரணைசெய்து வாதிதரப்பு சாட்சிகள்சொல்லிய சாட்சியங்களின்பேரில் வியாக்கியானம்செய்து ஜூரிகளைப்பார்த்துப் பேசினார்கள். சென்றவெள்ளிக்கிழமையோடு எதிர்க்கட்சி வக்கில்கள் ஜூரிகளைநோக்கிப் பேசவேண்டியது பேசிமுடியவே சென்ற சனிக்கிழமையதினம் காலமே கோர்ட்டுகூடினதும் சிரேஷ்ட நியாயாதிபதியவர்கள் இரு கட்சிக்காரர்களும்பேசிய நியாயவாதங்களையும் சேர்த்து ஜூரிகளுக்குப் பிரசங்கித்தனர். அதன்பேரில் ஜூரிகள் ஆலோசனைசெய்து கைதிகளனைவரும் எந்தக்குற்றச் சாட்டின்பேரிலும் குற்றவாளிகளல்லவென்று தீர்மானித்தார்கள். சாயந்திரம் இரண்டு மணிக்கு ஜூரிகளில் முதலாயுள்ளவர் எழுந்திருந்து கைதிகள் குற்றவாளிகளல்லவென்று ஜூரிகள் தீர்மானிப்பதாகச் சொல்லியதும் கோர்ட்டில் நிறைந்திருந்த அத்தனை ஜனங்களும் பெருஞ் சப்தமிட்டுக் கைகொட்டிக் களித்து ஆர்ப்பரித்தார்கள். இச்சென்னையில் ஹைகோர்ட்டு ஸ்தாபனமான நாள்முதல் இதுவரையில் எந்நாளும் மேற்படி கோர்ட்டுமுன் விசாரணைக்கு வந்திராத அவ்வளவு பிரமாதமான இந்தகேஸ் நீதிமுறைபிறழாமல் எல்லாருக்கும் திர்ப்திகரமாய் இவ்வாறு முடிவுபெற்றது.—சுதேசமித்திரன்.

## வர்த்தமானம்.

நாயின் அன்பு—பிராஞ்சுதேசத்தில், டூலூஸ் என்னும் ஊரில், ஒரு பெண்பிள்ளை கழனியில் வேலைசெய்யும்பொழுது நிழலாயுள்ள ஓர் மூலையில் தன்னுடைய குழந்தையைவிட்டு வைத்தாள். எப்பொழுதாவது ஒருவேளை முலைகொடுக்க வருவாள். அக்குழந்தைக்குக்காவல் ஓர்நாயை ஏற்படுத்தினாள். பின்னையும் இரண்டுநாழிகை கழிந்தபின் முலைகொடுக்கவந்தாள். அக்குழந்தை முன்போல ஆவலாய் ஸ்தந்யபானஞ் செய்யவில்லை, பசியில்லையென்றும் சொல்வதற்கிடமில்லை வேறுவியாதியும் கிடையாது. ஒருநாள் தன்குழந்தையை வீட்டுக்குக் கொண்டுபோகும்படி வந்தாள். வெகு ஆச்சரியமாய் தன்குழந்தை நாயின் முலையை வாயில்வைத்து பாலுண்பதைக் கண்டாள். உண்டபின் குழந்தையை வீட்டுக்கு எடுத்துக்கொண்டுபோனாள். அப்படியே வழக்கப்படுத்திக் கொண்டுவந்தாள். அந்தநாய் குழந்தையை தன்குழந்தைபோல் பாவித்து அதிக பிரீதியாய் பாராட்டிக்கொண்டு வந்தது. அக்குழந்தை பெரியவனானபின்பு ஒன்றுக்கொன்று அந்யோந்யம பாராட்டிக்கொண்டதுகளாம்.

## தமிழ்சந்தாவிபரம்.

| உள்ளூர்—(அட்வான்சு.) | | Rs. | As. | P. | வெளியூர்—(அட்வான்சு.) | | Rs. | As. | P. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாசம் | 1-க்கு | 0 | 4 | 0 | மாசம் | 1-க்கு | [illegible] | [illegible] | [illegible] |
| ஷை | 3-க்கு | 0 | 10 | 0 | ஷை | 3-க்கு | 0 | [illegible] | [illegible] |
| ஷை | 6-க்கு | 1 | 2 | 0 | ஷை | 6-க்கு | 1 | 8 | [illegible] |
| வருஷம் | 1-க்கு | 2 | 2 | 0 | வருஷம் | 1-க்கு | 2 | 14 | [illegible] |

☞ எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும், 1885-ம் வருஷ[illegible]ளை செலுத்தவேண்டிய பாக்கிகளும் பு. முனிசு[illegible] பிராயகருக்கும்; 1886-ம் வருஷத்திய சந்தாக்களு[illegible]ம், இங்கிலீஷ் பத்திரிகைகளும், செகுலர் சொஸை[illegible] ஆனொரி செக்ரிட்டேரி மெஸ்டர். அப்ஷன்து[illegible]யவர்கள் பெயரால் பெரம்பூர் பாரெக்ஸ்ரோட்[illegible] அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
AUTHI KALANITHI PRESS,
No 6, Natoo Pilliar Covil Street, MADRAS.